**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – கோயம்புத்தூர் மாநகராட்சி– உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ,கோவை 2010 – அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் –ரூ.703.75 இலட்சம் அரசு மானியம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – திருத்தங்கள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசாணை (நிலை) எண்.48** **நாள் :08.03.2010**

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை (நிலை) எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை, நாள் 10.02.2010.

**மீண்டும் படிக்கவும்:-**

2. ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் கடித எண்.Roc. எண். 1516/2010/B2, நாள் 18.02.2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 59908/ 2009/இ3, நாள் 22.02.2010.

----

**ஆணை :**

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ஆகியோர் இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் தெரிவித்துள்ள சூழ்நிலைகளில் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்ட திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

**திருத்தங்கள்**

1) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 2–க்கு அடுத்ததாக கீழ்க்கண்ட பத்திகள் சேர்க்கப்படுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.703.75 இலட்சம் (ரூபாய் எழுநூற்று மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட செலவு கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்

“ 2217 நகர்ப்பகுதி வளர்ச்சி
80 பொது
800 ஏனைய செலவு
பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்
II மாநிலத் திட்டம்
JJ உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மானியம் வழங்குதல்
09 உதவித் தொகை
03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(கு.தொ.கு.2217–80–800–JJ-0935)”

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ‘‘புதுப்பணி’’ (New Service) குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேலும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் . இதற்கான ஆணை நிதி (வ செ பொது1) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவிற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (வ.செ.தி.பொது.1) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் இரு படிகளில் விண்ணப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2009–2010–ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை அரசின் நிதித்துறைக்கு உடனடியாக அனுப்பி வைக்கும்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5 அவர்கள் மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுபாடு அலுவலராவார்.

2) மேற்கண்ட அரசாணையின் பத்தி எண்.3–ஐ பத்தி எண்.6 என மாற்றி படிக்கப்படவேண்டும்.அவ்வாறு மாற்றி படிக்கையில் கீழ்க்கண்ட வாசகத்தினை பதிலீட்டகற்றீடாக சேர்க்க வேண்டும் :

"இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.11574/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்/2010,நாள் 08.03.2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் அதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்(1739 (ஆயிரத்து எழுநூற்று முப்பது ஒன்பது) )"

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**நிரஞ்சன்மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை–600 005.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
மாநில கணக்காயர்(A&E), சென்னை – 18/32.
மாநில கணக்காயர்(தணிக்கை) ,சென்னை –18.
இயக்குநர் , உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
தனி அலுவலர்,உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு,
சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,
சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
**நகல்:**
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–600 009.
நிதி (ந.நி.(ம)கு.வ./ வ.செ.பொது.I / வ.செ.பொது.II/ வழி வகைகள் I) துறை,
சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச்செயலர்,
சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**